முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1148

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.11.2022, ஞாயிற்றுக்கிழமை

1. மாதர்மராஜனே அரங்கா வாழ்க
மக்களை காக்க வந்த தேசிகா வாழ்க
பூதளத்தில் எங்கும் தர்மம் நிலவ
புண்ணியவழி காட்டும் அரங்கனே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 04 ம் நாள் 20.11.2022, ஞாயிற்றுக்கிழமை)
ஊழ் போக்கும் மகாசக்தி கலியில் நீயப்பா
உலகோரை காக்கும் மாதவசி நீயே அப்பா
3. அப்பனே அரங்கனே உந்தனுக்கு
அகிலத்தில் ஆறுமுகன் யான்
சூட்சும சக்தியாக உடனிருந்து
சுருதிபடி உன் மார்க்கம் வளர்த்துவர
4. மாட்சிமைபட உன்னை நம்பிவரும் மக்களெல்லாம்
மண்ணுலகில் ஞானியாவது உறுதியப்பா
அப்பனே என் அவதார அரங்கனே
ஆற்றலாய் யான் உன்னுள் நித்தம் நித்தம்
5. மாற்றம் பல தந்து
காத்து வர அரங்கனே
உன் நோக்கம் வெற்றி கொள்ளும்
உன் அவதாரம் பல சித்திகளை காணும்
6. காணவே உன் வழி மெய் அன்பர்களாக
கருணைகொண்டு கணக்காய் தொடர்தொண்டு ஆற்றுகின்ற மக்களெல்லாம்
ஞானவான்கள் உன் அவதாரத்தின் நோக்கமாக
நம்பிக்கை உள்ள ஞானிகளாக மாற்றங்கண்டு சிறக்க நேரும்
7. நேர்மைகொண்டு உன் தர்மத்தில் உதவுபவரும்
நேர்மைகொண்டு உன் தர்மத்தில் தொண்டு செய்பவர்களும்
நிலவுலக ஞானிகளாக மாற்றங்கண்டு
ஆறுமுகன் என்னால் அங்கீகாரம் பெறுவர்

அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–